இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 190 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 08 – வெள்ளிக்கிழமை 20 பிப்ரவரி 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 190 : Thiruvalluvar Year - 2057 - Maasi 08 - Friday 20 February 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00







கிராமப்புற மக்களின் வீட்டுக் கனவை நனவாக்கிய

கலைஞர் கனவு இல்லம் திட்டம்

2 இலட்சம் வீடுகளுக்கு அனுமதி

1.75 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன

மேலும் 1 இலட்சம் வீடுகள் கட்ட அனுமதி

வீட்டிற்கு 3.5 இலட்சம் அரசு மானியம்



வெல்வோம் ஒன்றாக!

செ.ம.தொ.இ / 202 / வரைகலை / 2026


## மாநில சுயாட்சி: பேரறிஞர் அண்ணாவின் உயிலுக்கு உயிர்கொடுப்போம்; தலைவர் கலைஞரின் ஐம்பெரும் முழக்கத்தை நிறைவேற்றுவோம்!

# அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் உண்மையான கூட்டாட்சி உருவாகிட பாடுபடுவோம்!

## பேரவையில் ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த குழுவின் அறிக்கையை முன்வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, பிப். 20-**

**“பேரறிஞர் அண்ணா அவர்களின் உயிலுக்கு உயிர் கொடுப்போம்; தலைவர் கலைஞர் அவர்களின் ஐம்பெரும் முழக்கத்தை நிறைவேற்றிக் காட்டுவோம்!” என்றும் “மாநில சுயாட்சி மலர உண்மையான கூட்டாட்சி ஒன்றியத்தில் உருவாகட்டும்” என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சட்டப்பேரவையில் ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு அறிக்கையை முன்வைத்து உரையாற்றும் போது கூறினார்.**

சட்டமன்றப் பேரவையில், ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கையின் முதல் பகுதியை முன்வைத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள், தன்னுடைய இறுதி உயில் போல எழுதியதுதான் மாநில சுயாட்சிக் கொள்கை. அவருடைய மறைவுக்குப் பிறகு தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், “மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி” என்பதை ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக வடித்துத் தந்தார். அதனை முழுமுதல் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்து, இந்திய ஒன்றியத்துக்கே வழிகாட்டும் மாபெரும் முன்னெடுப்பைச் செய்யத் தொடங்கும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட நாள்தான் இந்த நாள். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உடன்பிறப்பாக, ஒன்றியமாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கையின் முதல் பகுதியை இம்மாமன்றத்தில் வைக்க இருக்கிறோம்.

### ஒன்றிய அரசு மாநில அரசுகளை மதிப்பதில்லை!

ஒரு மாநிலமாக, நம் மக்கள் காணும் கனவுகளை முழுமையாக நிறைவேற்றும் அளவிற்கு நம்மிடம் அதிகாரங்கள் இல்லை. ஏனென்றால், மாநில உரிமைகளை வழங்கும் ஓர் ஒன்றிய அரசு அமையவில்லை. இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டுதான் சமூக நீதியில், கல்வியில், சுகாதாரத்தில், பொருளாதாரத்தில், உள்கட்டமைப்பு வசதிகளில் முன்னேறி வருகிறோம். நிதி உரிமை உள்ளிட்ட பல கோரிக்கைகளுக்கு நாம் இன்னமும் கடுமையாகப் போராட வேண்டிய சூழல்தான் உள்ளது.

**எனவே, எல்லா அதிகாரமும் கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் சட்டமுன்னெடுப்புகளை நாம் தொடங்கக்கூடிய நாள்தான், இன்றைய நாள்.** (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் ளே,

அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் வைத்துள்ள ஒன்றிய அரசு, அவற்றை எதேச்சாதிகார மனப்பான்மையோடு பயன்படுத்துவதோடு மாநில அரசுகளையும் மதிப்பதில்லை. எல்லாவற்றுக்கும் மாநில அரசுகள் ஒன்றிய அரசின் தயவை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கின்றன. இன்னும் எத்தனைக் காலத்துக்குதான் அவர்கள் கொடுக்கும் இடத்திலும், நாம் வாங்கும் இடத்திலும் இருப்பது? (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிலை மாற வேண்டும். இந்தப் பிரச்சினை களுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நம்முடைய நோக்கத்துக்கான விடைதான், ஒன்றிய மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கை. சுருக்கமாகச் சொன்னால், பூனைக்கு மணி கட்டியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற்றவையாக இருக்க வேண்டும், அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சி அரசாக ஒன்றிய அரசு செயல்பட வேண்டும் என்ற நம்முடைய இந்தக் கொள்கைதான் மற்ற மாநிலங்களின் உள்ளத்துக்குள் இருக்கும், வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கும் கொள்கையாக இருக்கும்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.02.2026) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஒன்றிய – மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கையின் முதல் பகுதியை முன்வைத்து உரையாற்றினார்.

### மாநில சுயாட்சிக் கொள்கையை அனைவரும் ஏற்க வேண்டும்!

எனவே, அனைத்து மொழிகள், இனங்கள், மதங்கள், பண்பாடுகள் உள்ளடக்கிய மாநிலங்களில் வாழும் மக்களை அவர்களது உரிமைகளோடு, உணர்வுகளோடு வாழ வைக்கும் உன்னதமான மாநில சுயாட்சிக் கொள்கையை, அரசியல் எல்லைகளைக் கடந்து அனைவரும் தங்களது அரசியல் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

### நீதியரசர் இராஜமன்னார் அறிக்கையை நாடே திரும்பி பார்த்தது!

மாநிலங்களின் உரிமைகள் குறித்து, 1963 இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் முழங்கினார். 1967இல் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தியது. ஒன்றிய-மாநில அரசுகளின் உறவுகளை ஆராய 1969இல் தலைவர் கலைஞர் அவர்கள் ஓய்வு பெற்ற நீதியரசர் பி.வி.இராஜமன்னார், டாக்டர் ஏ.லட்சுமணசாமி முதலியார், பி.சந்திரரெட்டி ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக் குழுவை அமைத்தார். இந்திய நாடே திரும்பிப் பார்த்தது. அந்தக் குழு விரிவாக ஆய்வு செய்து 1971இல் தனது அறிக்கையை வழங்கியது. இராஜமன்னார் குழு அளித்த முக்கியப் பரிந்துரைகளை இந்த மாமன்றத்தில் தீர்மானமாகவும் நிறைவேற்றினார் தலைவர் கலைஞர்.

> **சுருக்கமாகச் சொன்னால், பூனைக்கு மணி கட்டியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற்றவையாக இருக்க வேண்டும், அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சி அரசாக ஒன்றிய அரசு செயல்பட வேண்டும் என்ற நம்முடைய இந்தக் கொள்கைதான் மற்ற மாநிலங்களின் உள்ளத்துக்குள் இருக்கும், வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கும் கொள்கையாக இருக்கும்.**

இதனைத் தொடர்ந்து, ஒன்றியமாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திட, ஒன்றிய அரசின் சார்பில், 1983ல் நீதியரசர் சர்க்காரியா தலைமையிலான ஆணையம், 2000ஆம் ஆண்டில் வெங்கடாச்சலையா ஆணையம், 2004ல் நீதியரசர் பூஞ்ச்சி தலைமையிலான குழு ஆகியவை அமைக்கப்பட்டும், அவற்றின் சார்பில் ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட அறிக்கைகள் வழங்கப்பட்டும் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் ஏமாற்றமே தொடர்கிறது. இன்னும் சொன்னால், மாநில அரசின் பட்டியலிலுள்ள முக்கிய அதிகாரங்களைக்கூட, அடுத்தடுத்து ஒத்திசைவுப் பட்டியலுக்கு மடைமாற்றம் செய்யும் பணிகளே இன்றைய ஒன்றிய அரசால் விரைவாக


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்


## பிப்ரவரி 23-ஆம் தேதி முதல் மார்ச் 8 வரை

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை’

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

2026 ஜனவரி 13 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற “தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் **‘வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாகப் பரப்புரை’** நடத்திட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

‘திராவிட மாடல்’ அரசு அமைந்த பிறகு பெண்களுக்கான **‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ - ‘விடியல் பயணம்’ - ‘தோழி விடுதிகள்’ - ‘புதுமை பெண் திட்டம்’** உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, மகளிருக்கான ஆட்சியென நடைபெற்று வருகிறது. நமது சாதனைத் திட்டங்களால் பெண்கள் வெல்லும் தமிழ்ப் பெண்களாக உயர்ந்துள்ளனர். பெண்கள் பயனாளிகள் மட்டுமல்ல, மாநில வளர்ச்சியின் பங்குதாரர்கள் என்ற சீரிய சிந்தனையுடன் செயலாற்றும் ‘திராவிட மாடல் அரசு’ நிறைவேற்றியுள்ள நலத் திட்டங்களையும் - ‘பெண்களின் முன்னேற்றமே தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம்’ எனும் கொள்கை உறுதியுடன் பெண்களுக்கான எண்ணற்ற பல திட்டங்களையும் - சாதனைகளையும் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மகளிரிடம் எடுத்து சென்று சேர்ப்பதே இப்பரப்புரையின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இப்பரப்புரையை, வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் விதமாக தி.மு.கழகத்தின் சார்பில் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் மாவட்டச் செயலாளர்களால் வழங்கப்பட்டுள்ள பட்டியலின் அடிப்படையில், 10 மகளிரை கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் சார்பில் ஒரு உறுப்பினர் வீதம் தேர்வு செய்யப்பட்டு தொகுதி அளவிலான பயிற்சிக் கூட்டங்களை நடத்திட வேண்டும். “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” பரப்புரைக்கான சட்டமன்றத் தொகுதி வாரியான பயிற்சிக் கூட்டத்தை வரும் பிப்ரவரி 20, 21 மற்றும் 22-ஆம் தேதிகளுக்குள் அனைத்து தொகுதிகளிலும் நடத்தி முடித்திட வேண்டும்.

இப்பயிற்சியை, சட்டமன்றத் தொகுதி மகளிர் அணி பொறுப்பாளர்கள் வழங்குவர். பயிற்சிக் கூட்டத்தில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை பற்றிய முழு பயிற்சியும் வாக்குச்சாவடி அளவிலான மகளிர் குழு பொறுப்பாளர்களுக்கு அளிக்கப்படும். அதன் பிறகு அவர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடி யிலும் உள்ள இதர உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்து பரப்புரையைத் தொடங்கிட வேண்டும்.

தேர்தலை காரணமாக வைத்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தையே முடக்குவதற்கான ஒன்றிய பா.ஜ.க. - அடிமை அ.தி.மு.க.வின் சூழ்ச்சிகளை முறியடித்து, “ நீ ஆயிரம் ரூபாயை நிறுத்த முயற்சித்தால், நான் என் மக்களுக்கு ரூபாய் ஐந்தாயிரமாக தருவேன்” என சூளுரைத்து பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கான தொகையினை முன்பணமாக ரூ.3000/, கோடைக் கால சிறப்புத் தொகுப்பு ரூ.2,000/ என மொத்தம் ரூ.5000/த்தினை தமிழ்நாட்டு பெண்களுக்கு வழங்கிய திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் வீடு வீடாக எடுத்துச் சொல்ல வேண்டும். அதுமட்டுமின்றி, ‘திராவிடமாடல் 2.0’ ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ.2,000/மாக உயர்த்தி வழங்கப்படும் என்ற எனது உறுதிமொழியையும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தடையின்றி தொடர, கழக ஆட்சி தொடர்வது அவசியம் என்பதையும் மகளிர்க்கு உணர்த்திட வேண்டும்.

**வரும் பிப்ரவரி 23-ஆம் தேதி முதல் “வெல்லும் தமிழ்பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை”** தொடங்கி, உலக மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதிக்குள் அனைத்து வீடுகளையும் சென்றடையும் வகையில் சிறப்பாக நடத்திட வேண்டும்.

கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கழகத்தின் வெற்றியை உறுதி செய்து மீண்டும் தி.மு. கழகத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திட புறப்பட்டுவிட்டது இந்த ஸ்டாலினின் மகளிர் படை என இப்பரப்புரை சிறப்புடன் அமைந்திட வேண்டும்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மண்டல பொறுப்பாளர்கள் -பொறுப்பு அமைச்சர்கள் - மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் செய்துதர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**மு.க.ஸ்டாலின்**
தலைவர்,
தி.மு.க.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 18.02.2026